# சைவசித்தாந்த நோக்கில் ஆன்ம சிற்சத்திப் பிரமாணம்

**கி.கந்தவேள்**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*சைவசித்தாந்தச் செல்நெறியின் முக்கிய விடயமாக அமைவது அளவைப் பிரமாணங்கள் பற்றிய கருத்தியலம்சம் ஆகும். இந்திய மெய்யியற்புலத்தில் பத்திற்கும் மேற்பட்ட பிரமாணங்கள் இடம்பெறுகின்றபோதும் சைவசித்தாந்தம் காட்சி, அனுமானம், ஆப்தம் ஆகிய மூன்றையும் பிரமாணங்களாக எடுத்தாள்கின்றது. இம்மூன்றும் ஆன்ம சிற்சக்திக்கு உதவுவனவாக உள்ளன. இந்நிலையில் ஆன்ம சிற்சத்திப் பிரமாணம் என்பது ஏகப்பிரமாணமாக சுட்டப்படுகின்றமை நோக்கத்தக்கது. சைவசித்தாந்தம் சுட்டும் மூன்று பிரமாணங்களும் பொருள்களை ஆன்மாவுக்கு விளக்கி நிற்கும். அவ்வாறு பொருள்களை ஆன்மா விளங்கிக் கொண்ட பின்னர் உய்த்து அறிந்து கொள்வதே ஆன்ம சிற்சக்தி ஆகின்றது. சிற்சக்தி என்பது 'தன்னை நோக்கி நிற்கும் ஆற்றல்' எனப் பொருள் கொள்ளப்படும் நிலையில், சிவஞானசித்தியாரில் 'உயிரினோடு உணர்வு' என்ற சொல்லாட்சி மூலம் உயிரினின்றும் பொருட்களை அறியும் பொருட்டுச் செல்கின்ற பிரமாணம் எதுவோ அதுவே ஆன்ம சிற்சக்தி எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலுக்கமைய மேற்கொள்ளப்படுவதுடன் தர்க்கரீதியான பகுப்பாய்வு, தொகுத்தாய்வு முறைமைகளுக்கமைய முடிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியற் கோட்பாட்டின்படி ஆன்ம சிற்சக்தி என்பது சுயமாக இயங்கவல்லது. இதனால் அறிவு சுயம்பிரகாசமானது எனக் கூறப்படுகின்றது. இந்தவகையில் ஆன்மா அறிவைப் பெறுவதற்கு உதவியாக இருப்பது ஆன்ம சிற்சக்தி பிரமாணம் என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.*


**திறவுச்சொற்கள்:** ஆன்ம சிற்சக்தி, பிரமாணங்கள், சைவசித்தாந்தம், அறிவாராய்ச்சியியல், அறிவு

[1]*இலங்கை திறந்த பல்லைக்கழகம், யாழ்ப்பாணம்.*
krishnapillaikanthavel1976@gmail.com

## அறிமுகம்

சைவசித்தாந்தச் செல்நெறியின் முக்கிய விடயமாக அமைவது அளவைப் பிரமாணங்கள் பற்றிய கருத்தியலம்சம் ஆகும். இந்திய மெய்யியல் புலத்தில் பத்துக்கு மேற்பட்ட பிரமாணங்கள் எடுத்தாளப்படுகின்றபோதும் சைவசித்தாந்தம் காட்சி, அனுமானம், ஆப்தம் ஆகிய மூன்றையும் பிரமாணங்களாக எடுத்தாள்கின்றது. இந்நிலையில் இம்மூன்று பிரமாணங்களும் ஆன்ம சிற்சக்திக்கு உதவுவனவாக உள்ளன. (பாஸ்கரன்,க., 2006:166) சைவசித்தாந்தத்தைப் பொறுத்தவரையில் ஆன்ம சிற்சக்தியை ஏகப் பிரமாணமாகச் சுட்டுகின்றமை நோக்கத்தக்கது. மேலே குறிப்பிட்ட காட்சி, அனுமானம், ஆப்தம் ஆகியவற்றை வழிப்பிரமாணமாக (துணைப் பிரமாணமாக) சுட்டுகின்ற போக்கினை நோக்கமுடியும். சைவசித்தாந்தம் சுட்டும் மூன்று பிரமாணங்களும் பொருள்களை ஆன்மாவுக்கு விளக்கி நிற்கும் அவ்வாறு ஆன்மா விளங்கிக் கொண்டதன் பின்னர் உய்த்து அறிந்து கொள்வதே ஆன்ம சிற்சக்தி ஆகின்றது. (சிவானந்தமூர்த்தி, க., 2014:196)

ஆன்மாவுக்கு சிற்றறிவன் என்ற பெயர் உண்டு. இப்பெயர் பேரறிவன் ஆகிய இறைவனைப் போல பேரறிவுடையவனல்லன் எனச் சுட்ட முற்பட்டாலும் சிற்றறிவன் என்ற சொல் சிற்றறிவு என்ற சொல்லாட்சியில் இருந்து பிறந்தது. (அருணைவடிவேல்முதலியார், சி., 1991:611- 612) எனினும் சிற்சக்தி என்ற சொல்லாட்சியில் சிற் + சக்தி எனப் பிரித்து நோக்குகின்றபோது சித் - தன்னை நோக்கி நிற்கும் சக்தி – ஆற்றல் எனப்பொருள் கொள்ளுகின்ற நிலையில் சிற்சக்தி என்பது தன்னை நோக்கி நிற்கும் ஆற்றல் எனப் பொருள் கொள்கின்றபோது "ஆன்ம சிற்சக்தி என்பது ஆன்மாவிடத்தில் இருக்கும் ஆற்றல்" எனப் பொருள் கொள்ளலாம். ஆன்ம சிற்சக்தியை ஆங்கிலத்தில் ஸ்பிரிட்சுவாலிற்றி என (Spirituality) என பொருள் கொள்ளுமிடத்து Spirit என்பது ஆன்மாவைச் சுட்டுகின்றது. (Concise Advanced Deluxe Dictionary, pp.614-615) உண்மையில் Spirit என்ற சொற்பொருள் யாதெனில் உடற்பொருளற்ற ஆன்மா என்ற கருத்தினைச் சுட்டக் காணலாம். இந்நிலையில் Spiritual என்பது ஆன்மாவின் நிலையான தன்மையை குறிப்பதாகின்றது. எது எதுவாயினும் Spirituality என்பதுஆன்ம சிற்சத்தியைச் சுட்டுவதாகவுள்ளது.

சிற்சக்தி என்ற சொல்லாட்சி சிவஞானசித்தியார் அறுவருரையில் மறைஞான தேசிகர் ஒரே இடத்தில் சிற்சக்தியைக் குறிப்பிடுகின்றார். அவரின் பின் வந்த சிவாக்கிரக யோகியர் ஆன்ம சிற்சக்தியை பிரமாணமாக வரையறுக்கின்றார். 'அளவை என்பது ப்ரமாணம் ப்ரணத்தினது சாமான்னிய லஷ்ணம், சம்சய விபரியய ஸ்மிருதி வயதிரிக்தையான ஆன்ம சிற்சக்தியே' என சிவஞானசித்தியார் அளவைப் பகுதியில் உள்ள பாடலுக்கு விளக்கம் கொள்கின்றார். சிவஞானசித்தியாரது அளவை பற்றிய பாடல்களில் இந்திரியக் காட்சி,

மானதக் காட்சிகளின் இலக்கணம் பற்றிக் கூறும் பாடலில் பின்வருமாறு ஆன்ம சிற்சக்தியை அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

‘உயிரினோ டுணர்வு வாயிலொளியுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக்காட்சி
அயர்விலிந் திரிய ஞான மைம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்டலாமே’ (தி, 2010, ப.166)

எனக் கூறும் பாடலில் ‘உயிரினோடு உண்ர்வு’ என்ற சொல்லாட்சி மூலம் உயிர் - பிரமாதா அளப்பவன், உணர்வு - பிரமாணம், பிரமேயம் - அளவைகளாகிய விடயங்கள் அளக்கப்படும் பொருள் என்ற நிலையில் உயிரினின்றும் பொருள்களை நோக்கி ஓடுகின்ற உணர்வு ஆதலின் உயிர் அளப்பது என்பதனால் பொருள்களை நோக்கி அறியும் பொருட்டு ஓடுகின்றபோது அதுவே பிரமாணமாகின்றது எனச் சித்தியார் எடுத்துக் கூறுகின்றது. (திருவிளங்கம், மு., 2010:167) சிவஞானசித்தியாரின் மேற்போந்த பாடலுக்கு சிவஞானமுனிவர் உரையில் ‘தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய சிற்சக்தி’ எனக்கூறி ஆன்ம சிற்சக்தி பற்றிக் குறிப்பிடுகின்றார். அறுவருரையில் சிவாக்கிரயோகிகள் ஆன்ம சிற்சக்தி பற்றி பௌஷ்கராகமம் முதலிய ஆமகங்களினை அடிப்படையாக வைத்துக் கருத்துக்கூற முற்படுவதனால் அவர் அவ்யாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் என்னும் முக்குற்றங்கள் இன்றி நிற்கக்கூடிய சிவசிற்சக்தியே பெத்தம், முக்தி ஆகிய இரண்டிலும் பிரமாணம் என்பது அவரது உரையில் காணப்படுகிறது. (திருவிளங்கம், மு., 2010:23) அதவாது ஆன்ம சிற்சக்திக்குமம் சிவசிற்சக்தியே கட்டு, வீடு ஆகிய இருநிலைகளிலும் உதவுவதாகின்றது. எனினும் சிவப்பிரகாசத்தில்,

‘பொருந்தியிடும் வகை புணரும் புனித சக்தி யுணர்ந்தே’ (திருவிளங்கம், மு., 2010: 23)

என்ற பாடலிலும்

‘பன்னிறங் கவரும் தொன்மைப் படிகநீ டொளியும் பன்மை
மன்னிலங் கியல்பும் தந்த வளரொளி போலவையம்
தன்னகம் பயிலும் நற்சிற் சடங்களின் தன்மை தாவா
நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானமென்பர்’ (சித்தியார்.39)

எனச் சிவப்பிரகாசம் கூறுவதும் இக்கருத்தை மேலும் தெளிவாக்குகின்றது.

சிவாக்கிரயோகிகளின் சிவநெறிப் பிரகாசம் சைவசித்தாந்தப் பிரமாணம் சிற்சக்தியென்பதைக் கூறுகின்றது.

‘ஐயமுடன் றிரிவின்றி முன்னிசைவு மின்றி
ஐம் பொறிபோ லொன்றென்றே யறிதலின்றி
மையலறு காட்சியனு மானமுறை மூன்றின்
வகையனைத்தும் வியாப்தியாய் மதிப்பதாகிப்

பொய்யதுவாய் நேயமாம் பொருள்களின்றாகிப்
புந்திக்கு மேலான போதமாகிச்
செய்யசிவ சக்திதுணை யாய் விளங்குஞ்ச சீவ
சிற்சக்தி பிரமாண மெனத் தெரிப்பர் தெரிந்தோர்' (சித்தியார்.39)

எனச் சிற்சக்தி என்பது அந்தக் கடமென்கிற பொருளிலே 'பிரமை மெய்யாய்யிருக்கின்ற அறிவு' எனச் சுட்டப்படுகின்றது.

சைவசித்தாந்தம் அறிபவனது அறிவாற்றலே சிற்சக்தி என எடுத்துரைக்கின்றது. சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியலில் மூன்று விடயங்கள் முக்கியமானவையாக உள்ளன.

1. அறிபவன்
2. அறியப்படு பொருள் (அறிதல்)
3. அறிகருவி

இவை இந்திய மரபில் இரண்டு அம்சங்களைக்கொண்டு விளக்கப்படுகின்றது.

1. தர்க்கவியல் கூறு
2. உளவியல் கூறு

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களும் இவ்விரண்டு கூறுகளுடனும் தொடர்புபட்டது. இந்நிலையில் ஆன்ம சிற்சக்தி என்பது ஒர பிரமாணமாகக் கொள்ளப்படும் நிலையில் ஆன்ம சிற்சக்தி உயிரின் சாராம்சமாக இருக்கின்றதுடன் மேற்கூறிய தருக்க மற்றும் உளவியல் கூறுகளுடன் முற்றொருமை என்பது பண்பாக இருக்கின்றது.

இந்நிலையில் பிரமாணங்களில் தலையாயது ஆன்ம சிற்சக்தி எனவும் உயிரின் செயற்பாடுதான் ஆன்ம சிற்சக்தியின் செயற்பாடாகவும் சுட்டப்படுகின்றது. உயிருக்கும் சிற்சக்திக்கும் இடையிலான தொடர்பு பொருளுக்கும் அதன் பண்புக்கும் இடையேயான தொடர்பு எனச் சுட்டப்படும் நிலையில் குணத்திற்கும் குணிக்கும் இடையிலான தொடர்பாக இது சுட்டப்படுவதுடன் பிரிக்க முடியாததாகவும் உள்ளது எனலாம். உயிருக்கும் உடலுக்கும் வேறுபாடு உள்ளது உயிரானது காலவெளி கடந்தது. உடல் காலவெளி உள்ளது. உயிர் அனாதியானது உயிரின் பண்பு காலவெளி கடந்தது. உடல் உயிரைப் போலக் காணப்படுகின்றது. அறிவை ஒவ்வொரு ஆன்மாவும் தன்னைத் தாமே பெறும் என்ற நிலையில் ஆன்மாவிற்கு ஆன்மா வேறுபடும் முறையில் அறிவைப் பெறுகின்றன. இந்நிலையில் ஆன்ம சிற்சக்தியானது மலப் பீடிப்பினால் ஆன்மாக்கு ஆன்மா மாறுபடக் கூடியதாகவுள்ளது. ஆனால் சிவசிற்சக்தியானது ஆன்மாவின் பொருட்டு உலகை இயக்குகின்ற இறைவன் மலபந்தத்தால் ஆன்மா பீடிக்கப்பட்டதாகக் கொண்டு ஆன்மாக்கு ஆன்மா (மகாதேவன், T.M.P., 1957:10) வேறுபட்ட முறையில் ஆன்ம சிற்சக்தி என்பது ஏற்படுகின்றன.

சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியற் கோட்பாட்டின்படி ஆன்ம சிற்சக்தி என்பது சுயமாக இயங்கவல்லது. (பாஸ்கரன், க., 2006:166) இதனால் அறிவு சுயப்பிரகாசமானது எனக் கூறப்படுகின்றது. ஆனால் ஆன்மா தனது சுயப்பிரகாசமான அறிவை மலபந்தத்தால் மட்டும் அறிவைப் பெறமுடியாதிருக்கின்றது. இதேநேரம் சிற்சக்திக்கு எது உண்மையாகப் புலப்படுகின்றதோ அது அறிகையின் உள்ளடக்கத்திலும் உண்மையானதாக இருக்கின்றது எனலாம். கண் முதலிய பொறிகளும் மனம் முதலிய அகக்கருவிகளும் உருவம் முதலிய புலன்களை அளப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் ஆன்ம சிற்சக்தியே பொருள்களை அளவிடும். அவ்வாறு அளவீடு செய்கையில் கண் முதலிய புறக்கருவிகளும் மனம் முதலிய அகக் கருவிகளும் ஆன்ம சிற்சக்தியால் அளக்கப்படுகின்றது. உண்மையில் பிரமாணம் என்பது பொதுவாக அளவைப் பிரமாணங்களால் கூறப்படுகின்றபோது ஆன்ம சிற்சக்தியே உண்மையான பிரமாணமாக சைவசித்தாந்தம் எடுத்தாள்கின்றது.

அறிவு என்பது விடயங்களை உள்ளடக்கியிருக்கும் விடயம் ஆகும். இதுதான் அறிவைப் பெறக் காரணமாக இருக்கும். ஆன்ம சிற்சக்தி அல்லது ஆத்மாவினுடைய திறன் என்பது வியாபகமானது. ஆத்ம சிற்சக்தியின் வியாபகம் தான் ஆன்மா அறிவைப் பெறுவதற்கு உதவியாக மற்றும் சரியாக இருக்கின்றது. எதனால் எனில் வியாபகத்தன்மையுடைய ஆன்மசிற்சக்தி ஒளிவிடுவதற்கு அறிவு உதவியது. உயிர் அறிவே சொரூபமானது இந்நிலையில் தான் அறிபவனுக்கும் அறியப்படு பொருள்களுக்குமுரிய முற்றொருமை வெளிப்படுத்தப்படுவதுடன் அறிபவன், அறிவு ஆகியவற்றுக்கான வேறுபாடு நீக்கப்படுகின்றது. அறியும் பொருளுக்கு அறிவிக்கும் பொருளாய் நிற்பது அல்லது வெளிப்படுவது சிற்சக்தியாகும். இதனைத் தமிழில் காட்டு எனக் கூறினாலும் நினைவூட்டதலே இதின் முக்கிய பொருளாகிறது. 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' (கிருஷ்ணராஜா, சோ., 2008:29) எனச் சிவஞானபோதத்து பதினோராம் சூத்திரம் குறிப்பிடுவது போல காட்டும் என்பது உணர்தல் என்ற பொருளில் சுட்டப்படுகின்றது. கண்ணுக்கு விளக்குப்போல ஆன்ம சிற்சக்திக்குப் புறமும் அகமுமாய் உள்ள கருவிகள் காட்டாவனவேயல்லது. புறமும் அகமுமான கருவிகள் பிரமாணங்கள் ஆகாது இதனை உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசத்தில் 'புகல் அளவைக்கு அளவாகி' எனக் கூறினார். இதன்கருத்து யாதெனில் பிராமணங்கள் எல்லாம் சைவசித்தாந்தம் கூறும் பிரமாணத்திற்கு பிரமேயமாகிவிட சைவசித்தாந்தம் கூறும் பிரமாணம் - பிறிதொரு பிரமாணத்திற்கு பிரமேயமாகாது என்பதாகும்.

ஆன்ம அறியும் பொருளாகிய பிரமாதா எனும் அறிபவனாகவும் ஆன்மசிற்சக்தியே அறிவதற்குரிய பிரமாணமாயும், அனுபவ ஞானமே அறியப்பட்டதான பிரமிதியாகவும் கொள்ளப்படுகின்றது. அத்துடன் மற்றவையெல்லாம் பிரமேயங்களான அறிபொருள் எனக்

கொள்ளப்படுகின்றது என பௌஷ்கர ஆகமம் கூறுகின்றது. இந்த நிலையில் பிரமாணம் பிரமேயம் ஆகிய இரண்டும் வேறுபட்டது எனவும் இவ்வாகமம் சுட்டுகின்றது. இதனால் பௌஷ்கர ஆகமம் ஆன்மாவை அறிபவனாகிய பிரமாதா எனவும் ஆன்ம ஞானத்தால் வருகின்ற அறிகருவியாகிய பிரமாணம் ஆன்மாவின் சிற்சக்தியாகத் தொழிற்படுகின்றது. அத்துடன் அறிபவனின் தொழில் தான் பிரமிதி எனச் சுட்டப்படுகின்றது. (சிவானந்தமூர்த்தி, க., 2014:196)

ஆன்மாவுக்குரிய சிற்சக்தி என்பது ஆன்மாக்குரிய நேயம் ஆகும். ஆன்மாக்குரிய இன்பம் எல்லாம் வினைப் பயனால் வருவது என்பது சைவசித்தாந்த நிலைப்பாடாகும். (பாஸ்கரன், க., 2006:168) நிலையாதனவாகிய சடப்பொருளால் வரும் நிலையற்ற இன்பமே வினையால் வரும் உலகத்தில் இன்பம் என்பது புறப்பொருள் பற்றி புத்தி தத்துவம் அடைகின்ற பரிணாமம் ஆகும். முக்தியில் குணங்களோடு குறிப்பாக இறை ஆற்றலை ஆன்மா பெறுவதற்கு ஆன்ம சிற்சக்தி பயனுள்ளதாகிறது. சைவசித்தாந்தம் குறிப்பிடுவதுபோல ஆன்மாக்கு இச்சா, ஞானா, கிரியா சக்திகள் இருக்குமென்றும் இவை தான் சாதாரண உலகியல் வாழ்வை சிறப்பிக்கும் எனக் குறிப்பிடும் நிலையில் மேற்கூறிய மூன்று சக்திகளைவிட ஆன்ம சிற்சக்திதான் ஆன்மாவை வெளிப்படுத்தும் என்பதுடன் இவற்றுடன் வேறுபாடற்ற நிலையில் செயற்படும் என்பது சைவசித்தாந்த நிலைப்பாடாகவுள்ளது எனலாம். (பாஸ்கரன், க., 2006:169) ஆன்மாக்கும் ஆன்ம சிற்சக்திக்கும் இடையிலான தொடா்பை சைவசித்தாந்தம் குணம்—குணி—பாவ சம்பந்தம் எனக் கூறும் ஆன்மாவின் விருப்பம், அறிதல், செயல் ஆகிய செயற்பாடுகளைப் பொறுத்தே ஆன்மாவின் சக்திகள் மேற்குறிப்பிட்ட மூன்று சக்திகளாகக் கூறப்படும். இவற்றுள் இச்சா சக்தியை போக ரூபமாயும் ஞான மற்றும் கிரியா சக்திகள் காரிய ரூபமாயும் குறிப்பிடும் நிலையில் ஆன்ம சிற்சக்தி காரண ரூபமென்றும் சைவசித்தாந்தம் குறிப்பிடும்.

ஆன்ம சிற்சக்தி இரு வகை நிலைப்பாட்டுத் தன்மைகளைக் கொண்டு காணப்படுகின்றது. சிற்சக்தி என்பது ஒரு கருவியாகவும் மறு நிலையில் பெறுபேறாகவும் விளங்குகின்றது. சிற்சக்தி செயற்பாடு உயிரின் செயற்பாடு என்பதனால் கருவியாகவே செயற்படும்போது ஆன்மாவுடன் பிரிக்கமுடியாததாக இணைந்துள்ளதுடன் ஒரு பெறுபேறாக இருக்கும் நிலையில் ஞானமாகச் செயற்படுகின்றது. உயிருக்கும் அதன் பண்புக்கும் இடையிலான தொடா்பு எனச் சுட்டப்படுகின்றது. இதனால் தான் அருணந்தி சிவாசாரியாா் பிரமாணங்களின் விஷேட இலட்சணங்களிலே ஈடுபாடு கொண்டிருந்தமையும் காணமுடியும் எனத் தெரிவிக்கும் நிலையில் சிற்சக்தி குறித்து சிவாக்கிரகயோகிகளின் கருத்து முக்கியமாக அமைவதுடன் பௌஷ்கர ஆகமத்தை அடியொற்றி அமைகிறது. அவ்யாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் எனும்

முக்குற்றங்களின்றி நிற்கக்கூடிய சிவசிற்சக்தியே பெத்த நிலையிலும் முக்தி நிலையிலும் இடம்பெறும் என்பது இவரது கருத்தாகின்றது. சிவநெறிப் பிரகாசம்,

'எப்பொருட்கு மிலக்கணங்கள் பிரமாணங்க
ளில்லையே லிசையாதென்றியம்ப லாலே
முப்பொருட்டு மிலக்கணங்கள் பிரமாணங்கள்
மொழிந்திடுவா முத்தேச மிலக்கணம்பின்
தப்பறவே சோதித்த லென்று மூன்றாத்
தவறில்லாப் பிரமாணந் தனு நன்றாய் ...' (சித்தியார், 17)

என்ற பாடல் உத்தேசம், இலக்கணம், பரீட்ஷை என மூன்று முறைகளைக் கூறுகின்றது.

ஆன்ம சிற்சக்தி என்பது தனியான்மாவின் அறிவாற்றல் எனவும் சுட்டப்படுகின்றமை நோக்கத்தக்கது.

ஆன்ம சிற்சக்தி தொழிற்படுமாற்றை பின்வரும் பாடல் மூலம் அறியமுடியும்.

'இத்தகமை யிறையருளா லுயிரறிவு மறிவுக்
கீடாக வாடாதே யீரிரண்டு லுரைத்த
விந்தை முதலைவாரான் விளங்கு ஞான
மேவியிரு மௌவுரைப்ப ரசுத்த மாயை
ஐவத்த கீல தாள் மூல மலர் சிறிதே நீக்கி
மருவும் வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர விந்தையிடை நின்றறிவை யுயிர்க்குப்
பொருந்தியிருந் வகையுணரும் புனித சக்தி புணர்ந்தே' (திருவிளங்கம், 1971, 39)

எனச் சுத்த மாயையின் வெளியீடான கலை மூலம் ஆணவத்தின் கடும்போக்கைத் தவிர்த்து ஆன்மா விடயங்களை நுகரும் வகையில் இச்சா சக்தியை செயற்படச் செய்யும் ஐம்பொறி மூலம் கிடைத்த அறிவை புத்தி நிச்சயித்து ஆன்மாக்கு கொடுக்கும் இந்நிலையில் ஆன்மாவுக்கும் புத்திக்கும் இடையில் நின்று ஆன்மா கன்ம வினைக்கு ஏற்ப விடயத்தைப் பொருந்தும்படி ஆன்மாக்கும் புத்திக்கும் இடையில் நின்று செயற்படுவதுடன் அதைச் செயற்படுத்தும் சக்தியாக சிற்சக்தி அமைகின்றது.

ஆன்ம சிற்சக்தி பற்றிய கருத்தோட்டத்தில் ஆன்மாவும் சிற்சக்தியும் வேறுவேறு பொருளல்ல ஒரு பொருள் தான் எனக் குறிப்பிடும் நிலையில் அளப்பவனாகிய பிரமாதாவுக்கும் (அறிபவன்) அறிபொருள் ஆகிய பிரமேயத்திற்கும் இடையில் தொடர்பு இருப்பதனைக் குற்றமாக சில தரிசனங்கள் இந்திய மெய்யியற் புலத்தில் குறிப்பிடுகின்றபோதும் சைவசித்தாந்தம் ஆன்மா + சிற்சக்தி ஆகிய இரண்டு பொருள்கள் பிரமாதா, பிரமேயம் ஆகியவற்றின் மூலம் ஒன்றுபடுதல் முக்கியமாகின்றது. அதாவது ஆன்மா தன்னளவில்

அறிவாய் நிற்கும்போது ஒன்றாக இருக்கும் பிறபொருளை அறியும்போது தானும் சிற்சக்தியும் என இருமைப்படும். (சிவானந்தமூர்த்தி, க., 2014:199) இங்கு ஆன்மா அளப்பவன் சிற்சக்தி அளவையாக இருப்பதுடன் சிற்சக்தி பொருளை அளத்தல் பிரமிதி எனக் கூறப்படுகின்றது.

ஆன்ம சிற்சக்தி பற்றிய விடய ஆய்வில் மிகவும் முக்கியமாக சிற்சக்தி இரண்டு நிலைகளில் எடுத்தாளப்படலாம்.

1. சிவசிற்சக்தி
2. ஆன்மசிற்சக்தி

எனும் இரண்டுடன் அளவைகள் ஆகிய பிரமாணங்களின் ஒன்றுக்கொன்று நீக்கமற்ற தொடர்பு காணப்படுகின்றது. சிவசிற்சக்தி தான் ஆன்ம சிற்சக்தியைவழி நடாத்தும் எனலாம். இவ்வித வழிப்படுத்துமாற்றல் ஆன்மா பாச நீக்கத்தில் உண்மை நிலை உணரப் பெற்று ஆன்ம சிற்சக்தி படிப்படியாக சிவசிற்சக்தியாக பரிணமிக்கும். இந்நிலை வினைப்பயனுக்கு அமைவாக இருக்கும். ஆன்ம சிற்சக்தியில் சிவனே ஆன்மாக்கு உதவுபவராக மட்டுமன்றி அறிபொருளாக வும் இருக்கக் காணலாம். ஆன்ம விடுதலை அல்லது முக்தி பற்றிய நோக்கில் ஆன்மாவின் அறிபொருள் இறைவன் என்பதனால் ஆன்ம சிற்சக்திக்கு சிவசிற்சக்தி தான் மெய்யறிவை அல்லது உண்மை ஞானத்தைக் கொடுக்கிறது. இதனால் ஆன்மாக்கு அதன் சிற்சக்தி தான் சைவசித்தாந்த அறிவுக் கொள்கையில் முக்கிய இடம் பெறுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


அருணந்தி சிவாச்சாரியார் (1965), சிவஞானசித்தியார், சிவாக்கிரகயோகிகள் உரை, திருவாவடுதுறை ஆதீனம்.

அருணை வடிவேல் முதலியார், சி., (1991), சிவஞானபோத மாபாடிய பொருள்நிலை விளக்கம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இராமானுஜாச்சாரி.இரா., (1966), அறிவு ஆராய்ச்சியியல், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ் நாடு.

கணபதிப்பிள்ளை,சி., (2007), திருவருட்பயன், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, யாழ்ப்பாணம்.

கிருஷ்ணராஜா.சோ., 1995, சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.

……….. (1998), சைவசித்தாந்த மறுபார்வை, குமரன் பதிப்பகம், கொழும்பு.

சிவானந்தமூர்த்தி,க., (2014), சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல், அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்.

ஞானகுமாரன், நா., (1994), நயந்தரும் சைவசித்தாந்தம், என்.சி.பி.எச், சென்னை.

…………. (2017), இந்திய அறிவாராய்ச்சியியல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

திருவிளங்கம்,மு., (1971), சிவஞானசித்தியார் சுபக்கம், கூட்டறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனை நிலையம். தமிழ்நாடு.

பாஸ்கரன்.க., (2006), சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மகாதேவன்.ரி.எம்.பி., (1938), அத்துவித தத்துவம், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ்நாடு.